கோலாக்கால எமன் வந்துகெட்டு, கொட்டுமோளம்
கொட்டிக்கெட்டு

521. கொள்ளை ஜனம் கூடிகெட்டு ஞான அக்கச்சி
கொண்டுபோவ துண்மையடி ஞான தங்கச்சி

காலன் வருவதற்கு முன்னே, கண் பஞ்சடையும் முன்னே

522. உற்றார் ஊரார்கூடி அழும்முன்னே ஞான அக்கச்சி
உணர்ந்துண்மை கடவுளை காண்பாயடி ஞான தங்கச்சி

சிக்கெனப் பிடித்துக்கொள், சிக்கையில் ஈசன் பார்த்தபின்

523. எமன் வந்து உனை பிடிக்கமுடியாதடி ஞான அக்கச்சி
எமனை நீபிடித் தாட்டலாமடி ஞான தங்கச்சி

பூஜ்யத்துக்குள்ளே உண்ணுள், இரசரியம் அமைத்த
இறையவனை

524. புரியாதவர்கள் கோடாகோடி ஞான அக்கச்சி
புரிந்தவர் கோடியிலொரு தெய்வமடி ஞான தங்கச்சி

மானிட ஜென்மமடி மனிதன், மாண்டால் வருமோடி

525. மானிலத்தில் உயர்ந்தவனடி ஞான அக்கச்சி
மனிதனுனுல் அறிவானடி ஞான தங்கச்சி

உண்மையான விருச்சத்திலே, பலஜாதி காய்கனிகளிக்கே

526. கற்பக விருச்சமும் அதுதானடி ஞான அக்கச்சி
கலங்கமற்றது பார்க்கலாம் வாருமடி ஞான தங்கச்சி

விதியில்லாது மதியில்லே, மதியில்லாது விதியில்லே

527. விதியை வென்றவர் மெய் ஞானியடி ஞான அக்கச்சி
விதியென்று மோசம்போனவர் அஞ்ஞானியடி

மூப்பொருள் பற்றற்ற மெய், முறை குருவை
போற்றினையானுல்

528. முதல்வனே கண்டுகொள்வாய் ஞான அக்கச்சி
மூவுலகம் உன் வசமாகுமே ஞான தங்கச்சி

சத்தியபிடி தெய்வபிரான், சன்னதியின் உட்சென்று

529. சகத்குரு ஆதி சங்கரர்முதல் ஞான அக்கச்சி
சகலரையும் நேரில் காண்பாயடி ஞான தங்கச்சி

மூப்பொருள் பற்றற்று மெய்ப்பொருள் கண்டவர்கள்

530. உண்மை கடவுள் என்னும் பொருளே ஞான அக்கச்சி
உள்ளக்கை கனியாய் தருவாரடி ஞான தங்கச்சி

நிதானம் பிரதானமென்று, நிர்ணயமாய் உயர்வானவர்கள்

531. நிர்மல தேகியான இறையவனே ஞான அக்கச்சி
நிலத்தில் கண்டு இன்பம் கொள்வாரடி ஞான தங்கச்சி

ஆதியின் படைப்பிலே சந்திரசூரிய நட்சத்திரக்கள்

532. அறிவுள்ள மனிதன் உன் ஆயுளெல்லாம் ஞானஅக்கச்சி
அகிலத்தில் சந்திரசூரிய னுண்டாக்க முடியுமா
ஞான தங்கச்சி

சந்திர மண்டலத்திற்கும், வெள்ளி செவ்வாய்
வானலோகத்திற்கும்

533. மனு விஞ்ஞானத்தாலலிந்து சாவான் ஞான அக்கச்சி
மக்களுக்கு பலனென்றும் கிட்டாதடி ஞான தங்கச்சி

அனுகுண்டு மற்றும் கொடிய மனிதன் அழிவுக்கு யாவும்
செய்வான்

534. அழிக்க அறிவால் முயற்சிக்கும் அற்பன் ஞானஅக்கச்சி
ஆண்டவனே மறந்த மிருகமடி ஞான தங்கச்சி

விஞ்ஞானம் உன் அழிவுக்கு, அஞ்ஞானம் ஞானமற்றது

535. மெய்ஞானம் காத்து ரட்சிப்பது ஞான அக்கச்சி
மெய் அழியாது பொய் அழியுமடி ஞான தங்கச்சி

ஆயிரம் வேரைக் கொன்றவன், அரை வைதீசனுவா
னென்றும்

536. அன்று உயிர் காப்பாற்ற வைதியனும் ஞான அக்கச்சி
இன்று கொலைசெய்ய டாக்டர்களாம் ஞான தங்கச்சி

அளவுகடந்த பணச்சிலவிலே, ஆஸ்பத்திரி என்றுண்டாக்கி

537. அங்கு ஆடுமாடுகளைப்போல் ஞான அக்கச்சி
ஆறுப்பார்கள டாக்டர்கள் கூடி ஞான தங்கச்சி

அய்யறிவு மட்டியன் அறிவுகெட்ட, அற்பன் மிருகமான
மனிதன்

538. ஆண்டவன் இயற்கையை ஞான அக்கச்சி
அறிவால் மாற்ற முடியுமோடி ஞான தங்கச்சி

இறப்பதும் பிறப்பதும், இறையவனருலல்லாது

539. இறக்கவைப்பான் பிறக்கவைக்க ஞான அக்கச்சி
இடுமடையன் மனுவாலாகாதடி ஞான தங்கச்சி

வாயளவில் பேச்சுப்பேசி, வையகத்தில் உயர்பதவி

540. அடைந்துபின் சுயநலவாதியாகி ஞான அக்கச்சி
அற்பன் கலி கடைசியில் வருவானடி ஞான தங்கச்சி

அவனவன் அறிவை அவனவனே, திருத்தவேண்டுமல்லாது

541. பிறரால் அறிவை திருத்தமுடியாது ஞான அக்கச்சி
பிறவியில் மனிதரில் மிருகமுண்டும் ஞான தங்கச்சி

ஆண்டவன் படைப்பிலே, அனைத்திலும் முதற்பொருளாகி

542. சகல ஜீவனிலும் ஒரேரூபமாகி ஞான அக்கச்சி
சக்தி சிவனுக வியாபித்தவடி ஞான தங்கச்சி

நான்முகன் படைப்பிலே உலகில், மக்கள் யாவரும் சமமாகி

543. உயிர் ஒன்று உடல் வேராகுமடி ஞான அக்கச்சி
உண்மை கண்டவன் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

தானமும் தர்மமும், நிதானமுள்ள பெரியோர்கள்

544 தவமிருந்து உயர்ந்தவர்கள் ஞான அக்கச்சி
தரணிபுகழ் சற்குரு நாதனுமடி ஞான தங்கச்சி

பஞ்சமாப் பாதகத்தை, பாவியர்கள் செய்வாருலகில்

545. தன்னுயிர்போல் மண்ணுயிர் காக்க ஞான அக்கச்சி
தரணியிலொரு பொய் பேச்லாமடி ஞான தங்கச்சி

இருகண் படைத்தவருலகில், பெரும் புண் படைத்தவ
ரென்பதை

546. திருஞானக்கண் பெற்றபின்னே ஞான அக்கச்சி
திருலோகம் போற்றுமுன்னே எந்தன் முன்னே ஞான
அக்கச்சி

எழுத்தறிவித்தவன் இறைவனுகு மென்றூர் ஔவை

547. என்னும் எழுத்தும் இரு கண்ணுகும் ஞான அக்கச்சி
எதிரில் காண்பது கண் ஒளிவாலாகும் ஞான தங்கச்சி

இனிமையான சம்சாரம், இன்பலோகம் என்பான் அஞ்ஞானி

548. இணை அடில்லாத சுவர்க்கலோகம் ஞான அக்கச்சி
இவனில் காண்பவன் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

தேனுகர் வண்டுமது, உண்டு மயக்கி கிடந்தாற்போல்

549. மண்ணுதி மன்னனுனலும் என் முன் ஞான அக்கச்சி
மயங்குவான் கள் குடித்தவன்போல் ஞான தங்கச்சி

மெய்யது வேண்டுமல்லது, பொய்யாகிலும் வேண்டுமுலகில்

550. ரெண்டுங்கெட்ட மூண்டையானுல் ஞான அக்கச்சி
ரெண்டுமில்லாது போவதண்மையடி ஞான தங்கச்சி

வேதவாளெடுத்த வீரன், ஜோதி வாசியிலே ருமாரன்

551. ஆகியந்தமான வேதமனைத்தும் ஞான அக்கச்சி
அறிவித்து நேரில்காட்டும் வல்லவனடி ஞான தங்கச்சி

செட்டு செய்வதில்லை பரதேசி, சட்டி எடுப்பதுவும்
தொல்லையென

552. திட்டமுடன் பிச்சைக் கஞ்சிக்கு ஞான அக்கச்சி
திகழும் மெய் ஞானிதடி போகானடி ஞான தங்கச்சி

கற்பக விருச்சத்தடியில் வைத்து, காயகற்பம் கையில்
கொடுத்து

553. காரை மெய்குருனவ அடுத்து ஞான அக்கச்சி
கரையேறுவது மெய் மயிர்பாலம்கடந்து ஞான தங்கச்சி

கற்பக விருச்சத்தை காட்டிடவும், காயகற்பம் கையில்
தரவும்

554. காசுபணம் ஒன்றும் வேண்டாம் ஞான அக்கச்சி
காட்டித் தருகிறேன் நேரில்வாடி ஞான தங்கச்சி

சாமியார் என்பவர்கள், சகலத்திலும் உயர்ந்திருப்பார்

555. ஜகத்தில் பிச்சை எடுக்கமாட்டாரடி ஞான அக்கச்சி
சாமியான கடவுளை காட்டுவாரடி ஞான தங்கச்சி

இரவு பகலற்றின்பமுட்ன், திருநீரணிந்துலகில்

556. இன்றன்றென்றும் இருப்பவரடி ஞான அக்கச்சி
இகத்தில் ஆதி பிராமணரடி ஞான தங்கச்சி

சந்திரரும் சூரியரும், தான் போகாத இடம் கண்டு
557. சாகாவரம்பெற்ற ஜாதி பிராமணரடி ஞான அக்கச்சி
சமரச தேவனும் அவர்தானுமடி ஞான தங்கச்சி

இரவுபகலற்ற இடத்தில், தன்னம் தனியாய் இருந்து
558. திருநீரணிந்தவர் ஈசனன்றே ஞான அக்கச்சி
திருலோகம் போற்றும் சிவனுமன்றே ஞான தங்கச்சி

சுழிமுனையாம் அதுபாரு, குச்சத்தில் மோட்சமுண்டும்
559. சுவர்க்க நரக இங்குண்டும் ஞான அக்கச்சி
சொல்லி கேரில் காட்டி தருவேனடி ஞான தங்கச்சி

பாவி என்று பேர்படைத்து, பாழ் நரகில் வீழாமல்
560. ஆவினின்ற சூத்திரத்தை ஞான அக்கச்சி
அறிந்தால் உயர்ந்திருப்ப துண்மையடி ஞான தங்கச்சி

அணிந்த தங்கம் இரவல், அணிந்த அணிமணியும் இரவல்
561. எதுவும் சொந்தம் இல்லையடி ஞான அக்கச்சி
எண்ணிப்பார் உடலுனக்கில்லையடி ஞான தங்கச்சி

தகப்பனில்லாது தாயில்லை, தாயில்லாது தகப்பனில்லை
562. விதியில்லாது மதியுமில்லை ஞான அக்கச்சி
மதியில்லாது விதியுமில்லை ஞான தங்கச்சி

இக்கடத்தை நீக்கி நம்மை, அக்கடத்தைக் குள்ளாக்கும்
563. இகத்தில் வைத்த உன் எதிரிலே ஞான அக்கச்சி
இன்பலோகம் காட்டுவான் குரு ஞான தங்கச்சி

வாக்காலும் நோக்காலும், பரிசத்தாலும், எதிரில் வைத்து
564. வகுத்துக் காட்டுவான் மெய் ஞானி ஞான அக்கச்சி
வாரி வாரி வழங்குவான் மெய்குரு ஞான தங்கச்சி

கடந்திலுள் இருக்கும் மெய், கடவுளே காணுமல் இங்கு மங்கும்
565. கல்லுடன் முட்டிக்கொண்டு ஞான அக்கச்சி
கடவுளே காணாது போவதை காட்டுவேனடி ஞான தங்கச்சி

நித்திக்கும் தேனுமிர்தத்தை, சித்தாந்த மெய்ப்பொருளே
566. முத்திக்கு சித்தான முதற்பொருளே ஞான அக்கச்சி
முனைந்து முன் காண வேண்டுமடி ஞான தங்கச்சி

கற்கண்டெந்த பாகத்தில், கடித்தாலும் தித்திக்குமது
567. கற்கண்டுக்கும் அதிமதுரமானதது ஞான அக்கச்சி
கண்டுண்டவன் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

இருதய கமலவாசனும், ஈசன் குடி இருக்குமிடமும்
568. இருதயத்தில் கோடி சூரிய பிரகாசமும் ஞான அக்கச்சி
இணங்கிவந்தால் காட்டுவேனடி ஞான தங்கச்சி

வெம்புவாள் விழுவாள் பொய்யே, மேல்விழுந் தழுவாள் பொய்யே
569. தம்பலம் தின்பாள் பொய்யே ஞான அக்கச்சி
தானும் சாகிறேன் என்பாள் பொய்யே ஞான தங்கச்சி

அம்பினும் கூர்மிய கண்ணுள், ஆயிரம் சித்தையாமே உலகில்
570. நம்பின பேர்களெல்லாம் ஞான அக்கச்சி
நாயினும் கேடாவாரே ஞான தங்கச்சி

வஞ்சவிசுமூலியரை, கொலியரென எண்ணி உலகில்
571. வருகியரெனும் பெரும் பேயை ஞான அக்கச்சி
வல்லபம் கொண்டொதுக்கு நாயை ஞான தங்கச்சி

பெண்ணாவம் கடியபாவண்ணம், பெண்சார்தல் தவிர்தில்லு
572. பேதைப்பெண்ணை ஒதுக்கித்தள்ளு ஞான அக்கச்சி
பேரின்பமடைவ துண்மையடி ஞான தங்கச்சி

பாழான சிற்றின்ப சாகமான, படுகுழியில் வீழ்ந்தவர்கள்
573. பரமபதம் அடையாமலே ஞான அக்கச்சி
பாவிளன்றகமம் படைத்துபோவாரடி ஞான தங்கச்சி

அக்கலலில வீசுமுலி, பெண்ணுசையை உலகில்
574. தூக்கத்திலும் நீங்கியாதே ஞான அக்கச்சி
துயர்மிகுந்து மாண்டிடுவாய் ஞான தங்கச்சி

பாசவலி விசியே, மோசமது செய்கின்ற
575. பாவையர்காளானது போதும் ஞான அக்கச்சி
பார்த்தெனியாளும் எப்போதும் ஞான தங்கச்சி

பாழான நரகிலும் கீழான, சிற்றின்ப படுகுழி மடுவதிலை
576. பாரில் ஜீவனுன சிவனழிக்கதை ஞான அக்கச்சி
பார்த்தபின் உணர்ந்தறிவாயடி ஞான தங்கச்சி

மாதருடன் கூடினும் கரியாது, நாதமது சிற்றின்பத்தில்
577. மண்ணுளிகாலம் காய்கனி இலையருந்தி ஞான அக்கச்சி
மரலிகையிலகப்படாது வாழலாமடி ஞான தங்கச்சி

ஆலயக்கண்டு தொழுவதும், அகிலத்தோடு ஒட்டி
வாழ்வதும்
578. இல்லறமல்லது கல்லறமென்றும் ஞான அக்கச்சி
இது மெய்குருவை காண்பதடி ஞான தங்கச்சி

ஒன்றுகி உருவில் இரண்டாகி, ஞானவேதம் நான்காகி
579. நமச்சிவாயம் ஐந்தாகி ஞான அக்கச்சி
நமக்குள் நடனமாடுதடி ஞான தங்கச்சி

ஐந்தும் மூன்றும் எட்டாகுமடி, எட்டிப்பிடி அது மெய்யடி
580. ஆதியும் அனுதியான மந்திரமடி ஞான அக்கச்சி
அறிந்து பார்த்தவன் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

எட்டாதிடத்திருந்து எட்டி, பிடித்தார்க்கில்பம் உலகிலடி
581. மட்டிலடங்காத இன்பமடி ஞான அக்கச்சி
மாதாசிவ சக்திதந்த இன்பமடி ஞான தங்கச்சி

எக்கும் நிறைந்தபொருள், எட்டியவர்க் கெட்டும் பொருள்
582. சகல ஜீவனிலும் காணும் பொருள் ஞான அக்கச்சி
ஜகத்தில் மெய்குருவான பொருள் ஞான தங்கச்சி

இகபரம் இரண்டிலும் உயிருக்குயிராகி நின்றிலங்கும்
583. எங்கும் நிறைந்திருக்கும் பொருளே ஞான அக்கச்சி
இன்றன்றென்றும் மெய்ப்பொருளே ஞான தங்கச்சி

அன்னக்கில் பொங்கிவரும், அமிர்தத்தை அறிந்து உண்ணில்
584. விண்ணவர்க்கும் மூவலுகுக்கும் ஞான அக்கச்சி
வேந்தனுவுதுண்மையடி ஞான தங்கச்சி

செய்வதில் உயர்வான செபதபமே தனித்தலகில்
585. ஜென்ம சாபல்யமாகுமடி ஞான அக்கச்சி
வேறு செய்வது மயிரொன்றம் இல்லையடி ஞான
தங்கச்சி

கண்மூடி ஒருகணம் இருக்கலாமென்றுல் பாழுலகில்
586. கர்மங்கள் போராடுதே ஞான அக்கச்சி
கண்டு சிவனடி பற்றிடுவாய் ஞான தங்கச்சி

நாயினும் கடையாகி, நாரி சாகும் மடையனென்னே
587. நாதகுரு நாதனுகிவந்து ஞான அக்கச்சி
நாற்றத்தை மாற்றி விட்டாயடி ஞான தங்கச்சி

பந்தமறந்து மெய்ஞானம், பாரிலிலே நிரம் தந்தனே
588. பாதுகாத்து அருள் செய்வாயடி ஞான அக்கச்சி
பார்க்கும் பரிபூரணம் நீ ஆவாயடி ஞான தங்கச்சி

நாயினும் கடையாகி நலம், ஒன்றறியாத மடையனென்னே
589. தாயினும் சிறந்த தயவாகி ஞான அக்கச்சி
தற்காத்த குரு பெருமானே ஞான தங்கச்சி

பேசும் எழுத்தைக்கண்டு, பேசுபவன் மெய் ஞானியாவான்
590. பேசும் எழுத்தும் பேசாதெழுத்தும் ஞான அக்கச்சி
ஆசான் காட்டும் எழுத்தாகுமடி ஞான தங்கச்சி

சொன்னதொரு சொல்லாலே ஒரு சொல்லால் கண்ட
உண்மையை நான்

591. வாய்விட்டு சொல்லமுடியாதடி ஞான அக்கச்சி
வாழ்வெனக் குலகிலில்லையடி ஞான தங்கச்சி

முத்தாகி முதல் வித்தானவன், முதல்வனுகி உன் உடலில்
592. மூலமுகம் அதுவானவனே ஞான அக்கச்சி
மூனைந்தால் முன் காட்டுவேனடி ஞான தங்கச்சி

கடவுளைக் காட்டி உன்முன், கையில் நெல்லி கனிபோலே
593. அனைவருக்கும் தருவேன் அதுபார் ஞான அக்கச்சி
ஆண்பிள்ளையாலுல் ஓடிவாடி ஞான தங்கச்சி

தனையறித் தின்பமுற்று, தனித்தொரு இடமிருந்து
594. ஒன்றை பொருந்தி எல்லையில் ஞான அக்கச்சி
ஒடுங்கி நீ இருப்பாயடி ஞான தங்கச்சி

உருவாகி அணுவாகி, உளதாகி இல்லாததாகி
595. கருவாகி உயிராகி ஞான அக்கச்சி
கதியாகி நிதியாகி ஞான தங்கச்சி

கடவுள் இருக்கிறார் உன்னுள், தெரிவதை பார்க்கலாமே
596. கடவுளை கண்டவன் மெய் ஞானியடி ஞான அக்கச்சி
கடவுளை காணுதவன் அஞ்ஞானியடி ஞான தங்கச்சி

செத்த இடம் பெற்ற இடம், தன்னில் அறியாதவர்கள்
597. சீரழிந்து போவதை உலகில் ஞான அக்கச்சி
கூனத்தில் ஞானியாலுல் காட்டுவானடி ஞான தங்கச்சி

மண்ணுக்கிறையாவாய் நீ உலகை ஒருநாள் மறப்பாய் நீ
598. உன்னுளை சத்தியம் அது ஞான அக்கச்சி
உண்மை அது அறிவாய் நீ ஞான தங்கச்சி

தொந்தி வயறும் எருமை யாகனக்கும் பெரிய ரூபமாகி
599. இந்தவிதம் இருந்துவிட்டால் ஞான அக்கச்சி
ஏகனை பெரிய மனிதனுமடி ஞான தங்கச்சி

மனிதன் மரணமாகுமுன்னே, மதிப்பு எத்தனை உலகிலிருந்
தாலும்
600. கடைப்பிணம் மெய்ப்பிணமானபின்னே ஞான அக்கச்சி
நாயிக்குள்ள மதிப்புமிருக்காதடி ஞான தங்கச்சி

உடம்பினை பெற்ற பயனுவதெல்லாம், உத்தமனை காணத்தா
னுலகில்
601. உயிர் உலகிலுள்ளபோதே ஞான அக்கச்சி
உண்மை உத்தமனை காண்பாயடி ஞான தங்கச்சி

எருமைக்குப் பிறந்தவனே, எமனேறும் முரட்டு வாகனமே
602. எல்லளவும் அறியா மூடனவன் ஞான அக்கச்சி
எத்தனை சொன்னலும் அறியானடி ஞான தங்கச்சி

மக்களுக்கொரு ப்லனளிக்காத, மடையன் கலி முதிர்ந்த
காலத்திலே
603. ஆண்பெண் அலங்கரித் தலைவதை ஞான அக்கச்சி
அற்பன் கடை ஆட்சியிலே காணலாமடி ஞான தங்கச்சி

எந்த ஜென்மத்திலிருந்து இந்த ஜென்மத்தில் மனு ஆனலும்
604. முன் ஜென்மத்தில் குணம் செயலும் ஞான அக்கச்சி
மனுவாக பிறந்தாலும் மாறுதடி ஞான தங்கச்சி

பஞ்சமா பாதகத்தில் கொலை, களவு சூது காமம் பொய்யும்
605. பொய் ஒன்று பேசலாம் உயிர் காப்பாற்ற
ஞான அக்கச்சி
பொய் பேசாதவன் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

தானத்தில் உயர்நிதானம், செல்வத்தில் உயர்செல்வம் கல்வி
606. மெய்க்கல்வி கண்டு படித்தவன் ஞான அக்கச்சி
மேதினியில் மெய் ஞானிதானடி ஞான தங்கச்சி

மனுவானவன் மனுவாகாது, போவதை யிக்குன்முன்
607. மனு மிருகமாவதையும் ஞான அக்கச்சி
மனுவான பின் அறிவானடி ஞான தங்கச்சி

உண்டாக்கியது ரெண்டுபேரு, கொண்டுபோவார் நாலுபேரு
608. கொண்டாடும்போது நூறுபேரு ஞான அக்கச்சி
கூடவருவதங்கே யாரு கூறு ஞான தங்கச்சி

ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே, ஆடி அடங்குவது
மண்ணுக்குள்ளே
609. அனைத்தையும் பார்ப்பது கண்ணுக்குள்ளே
ஞான அக்கச்சி
ஆத்திரம் கொள்வது மனசுக்குள்ளே ஞான தங்கச்சி

நாடு அது நாடு எது, நாடாவிட்டால் ஏது நாடு
610. ஜெகத்தில் சொந்த வீடு தேடு ஞான அக்கச்சி
ஜெனன மரணமில்லா ஒடி தேடு ஞான தங்கச்சி

இறைவனடி கண்டு சேராதார், பிறவிப் பெருங்கடலில்
நீந்துவாரென்றும்
611. வள்ளுவர் சொன்ன சத்தியத்தை ஞான அக்கச்சி
வந்தாயானுல் கேரில் காட்டுவேனடி ஞான தங்கச்சி

கிறைமொழி மாந்தர் பெருமை, மறைமொழி காட்டுமுலகில்
612. கிஜ வள்ளுவர் சொன்னதை ஞான அக்கச்சி
நிரூபிக்கிறேன் கேரில்வாடி ஞான தங்கச்சி

அந்தமுள்ள பிரணவத்தை, நீ அறிய வேண்டுமானுலிங்கு
613. அந்த நாடு சென்றுவரும் ஞான அக்கச்சி
ஆசானை அடைய வேண்டுமடி ஞான தங்கச்சி

இந்தவிதமல்லாது நீ இரவு பகல் கோடி நூல்கள்
614. எப்படி தலைகீழாய் யோதிடினும் ஞான அக்கச்சி
என்றும் உண்மை அறிய முடியாதடி ஞான தங்கச்சி

இதுவரை கேட்டிராத, இன்ப ஒரு சொல்லாலிங்கு
615. இகபரம் காட்டி என் முன் தேவன் ஞான அக்கச்சி
இருதய பிரகாசமாக்கி விட்டாரடி ஞான தங்கச்சி

ஆணை மெய்ஞான, ஆன முகத்தான் குருவாகவேண்டும்
616. அரை நொடிக்குள் மும்மலமகற்றும் ஞான அக்கச்சி
அருளமுத திட்சை பெறவேண்டும் ஞான தங்கச்சி

அம்பலத்தில் நட மிடும் அய்யர் மெய் குருவானுலிங்கு
617. அன்பே சிவமாகி மூவுலகம் காட்டி ஞான அக்கச்சி
அறிவிப்பான் ஓமென்ற எழுத்தினுள்ளே ஞானதங்கச்சி

கங்குல் பகலற்ற இடம், எங்கும் நிறை கர்த்தனான சிவன்
618. காரணக் கடவுளானவனே ஞான அக்கச்சி
கண்டவன்தான் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

வஞ்சியர் செய்யும் மோசத்திற்கும், மறலி செய் நாசத்திற்கும்
619. அஞ்சி உனக்கடிமையானேன் ஞான அக்கச்சி
ஆதரிக்கும் மெய் குரு பொருளே ஞான தங்கச்சி

பூக்காத மாணுமலரே, புளிக்காத மா மலரே இன்ப
620. வாக்கால் மலரும் மெய் மலரே ஞான அக்கச்சி
வல்லபத்தால் காணும் மெய் மலரே ஞான தங்கச்சி

ஆண்டவன வேதமனைத்தும், ஆதி எழுத்தயிரின்
சப்தமதுவும
621. ஆதிமனு நாவில் வெளியாச்சு ஞான அக்கச்சி
அறிவித்து காட்டுவான் மெய்ஞானியடி ஞான தங்கச்சி

முடியடியாய் நின்ற நடு, மூலமணி விளக்கே என் முன்
622. அடிமுடியாய் நின்ற நடு ஞான அக்கச்சி
அகண்ட பரிபூரணமே ஞான தங்கச்சி

உயிருக்கு உருவமில்லை, அரூபியான மெய் ஜீவனது உலகில்
623. உருவமில்லாத ஜோதி அது ஞான அக்கச்சி
உலகில் கடவுள் என்னும் மெய்யது ஞான தங்கச்சி

குருவைத்தொழாத மனுக்கள், குப்பைகூட்டி ஒதுக்குமொரு
624. குப்பை கிடங்குதானே ஞான அக்கச்சி
குருவை கண்டபின் அறிவாயடி ஞான தங்கச்சி

உற்றுர் இருந்தென்ன உலகில், பெற்றுர் அடுத்திருந்தென்ன
625. உனக்கு உதவி இல்லை சத்தியம் ஞான அக்கச்சி
உன் உடலும் உனக்கில்லையடி ஞான தங்கச்சி

அற்புத கண்ணுடி காட்டி, அகிலத்தை அதனுள் காட்டி
626. அனைத்தையும் சுழன்றில் காட்டி ஞான அக்கச்சி
ஆண்டவனையும் நேரில் காட்டுவேனடி ஞான தங்கச்சி

அன்னுக்கென்ற கொடிமரமீதிற், கோபுர சந்திர
புட்பஹரனி
627. அன்னுக்கென்ற வலபுறத்திற் ஞான அக்கச்சி
அவ்விடம் கண்ட அக்கினி தீர்த்தமாம் ஞான தங்கச்சி

உருவத்தைக் காட்டும் கண்ணுடி, உலகத்தைக் காட்டும்
கண்கள்
628. ஞானக்கண்ணுல் கடவுளை காண்பது ஞான அக்கச்சி
ஞானியானுல் கடவுளை காட்டுவானடி ஞான தங்கச்சி

அகமுகத் திருகண்ணும், புறத்திலிருப்பது மனக்கண்ணுகும்
629. அகக்கண் கண்டவனஞ்ஞானியடி ஞான அக்கச்சி
புறக்கண் கண்டவன் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

மாணிக்கக் கல் கண்ணென்றும், மக்கா மதினு
முனவ்வராவில்
630. காணஹஜ்ஜு செய்தவரறிந்தனர ஞான அக்கச்சி
கண்மணி நாயகம் சொன்னரடி ஞான தங்கச்சி

சகலகலா வல்லவனும், சகத்தரு வானவனும் இங்கு
631. ஆதி கணகுண நாதனையும் ஞான தங்கச்சி
அன்றின்றென்றும் காணலாமடி ஞான அக்கச்சி

காணும் தெய்வமிருக்க, கற்சிலையை தெய்வமென்றுமுலகில்
632. ஆட்டி பூசை செய்தலுத்திடுவார் ஞான அக்கச்சி
ஆவி குலைய கத்தம்போல் கதறுவாரடி ஞான தங்கச்சி

கற்சிலையை தெய்வமென்றும், காணுத ரூபமென்றுமுலகில்
633. கத்தம்போல் கதறுவார்கள் ஞான அக்கச்சி
காணப்போவதில்லை உண்மை ஜீவனை ஞான தங்கச்சி

நியாகராஜ சாமியின் சங்கீதம், திக்திக்கும் தேனுமிர்தமாகி
634. திகள்துலகில் மெய்ஞான சங்கீதம் ஞான அக்கச்சி
தேவசங்கீதம் கேட்க சலிக்காதடி ஞான தங்கச்சி

கூத்தாடி ஆண்பெண்கள், ஆடிப்பாடுவார் மானம்விட்டு
635. காலிகள் பாடுவது சங்கீதமாகுமா ஞான அக்கச்சி
கழுதைபோலே கத்துமினி சங்கீதம் ஞான தங்கச்சி

அபலை பேதைப்பெண்களை, அலங்கோல ஆடை அணிவித்து
636. ஆசைகாட்டி கற்பழிக்க கயவர்கள் ஞான அக்கச்சி
ஆள் மாற்றி மாற்றி கட்டிப்பிடிப்பாரடி ஞான தங்கச்சி

மனிதன்தான் தெய்வமாவதும், மனிதன்தான்
முனிவனுவதும்
637. மனிதன்தான் தேவனுவதும் ஞான அக்கச்சி
மனிதன்தான் யாவுமாகலாமடி ஞான தங்கச்சி

சற்குரு மனிதனென்றும், மெய்குரு இறைவனென்றும்
638. எனக்குமுன் வந்த மெய் ஞானியர்கள் ஞான அக்கச்சி
எடுத்துரைத்த உண்மையிது ஞான தங்கச்சி

கொம்பூதி கோம்பனை உலகில், கொம்பு முளைத்தவனையும்
நேரில்
639. கொம்பனை இந்த கிழவன் ஞான அக்கச்சி
கொம்பு முளைத்தவனை காட்டுவேனடி ஞான தங்கச்சி

கலிக்கடைசி காலமதில் ஞானி, காசுமீது குறியாயிருப்பான்
640. காசாசை படும் ஞானியவன் ஞான அக்கச்சி
கயவனுவான் ஞானி காசுமுன்பு ஞான தங்கச்சி

கோவில் பூனையது தெய்வத்திற் கஞ்சாதென்பார் உலகில்
641. கோவில் பூசாரியும் அஞ்சமாட்டான் ஞான அக்கச்சி
கொலைகார அஞ்ஞானியும் அஞ்சமாட்டான்
ஞான தங்கச்சி

காட்டுக்கிரைத்த நிலா, கானலுக்கு பெய்த மழையும்
642. மேட்டுக்கிரைத்த விரையும் ஞான அக்கச்சி
மூடருக்கு சொன்ன மதிபோலேயடி ஞான தங்கச்சி

முத்தான முத்தாகி உள்ளுள், முதல்வனுனவன் முத்தாகி
643. முத்தாகி கடத்தினுள்ளானதை ஞான அக்கச்சி
முன்னிலையில் காட்டுவேனடி ஞான தங்கச்சி

சிம்மாசனமென்பது சிரசாகும், ஜீவகிலே சிரசில் அதுவாகும்
644. இகத்தில் ஜீவகிலே பார்த்தவன் ஞான அக்கச்சி
இகபரம் காண்பதுண்மையடி ஞான தங்கச்சி

அருபஜோதி இறையவன், தொடருவருடமவனே உன்னில்
645. உறுதியாக உணர்ந்தாயானால் ஞான அக்கச்சி
உண்மை மெய்ஞானம் காண்பாயடி ஞான தங்கச்சி

தேசிகனுடும் திருநடனம் திரு நயனத்திடை கண்டாயானால்
646. தித்தித்திடும் உன் உயிருலகிலே ஞான அக்கச்சி
திருநாவுக் கரசனைக் கண்டவுடன் ஞான தங்கச்சி

கலிமா விரலிரு மெய்பொருளிலும், பெருவிரலிரு செவியிலும்
647. இரவு பகலற்ற ரகசிய எல்லையிலே ஞான அக்கச்சி
சூஹேர்ரியில் செய்துவைப்பேனடி ஞான தங்கச்சி
[சூஹேர்ரியில் செய்துவைக்கும் உயர்நீட்சை]

கள்ளனுக்குள்ளே கலந்து, கள்ளனை மெய் கள்ளவனே
648. கலந்திருந்தால் ஜெயம்தானடி ஞான அக்கச்சி
கண்டபின உன சுயகாரியம் பாரடி ஞான தங்கச்சி

நாசி நுனியில் நயனத்திடை, நடுவில் திருநடனமாடுகின்ற
649. தேசிகனுடும் திருநடனம் கண்டால் ஞான அக்கச்சி
தித்திக்குமுன் உயிர் உடலுலகமதில் ஞான தங்கச்சி

மூக்கு முளிக்கிடையாம், மூக்கு நுனிகட்கிடையில்
650. ஆடும் திருநடனத் தாட்டம் ஞான அக்கச்சி
அறிந்தால் தனக்கொரு ஈடில்லையடி ஞான தங்கச்சி

ஆருக்கும் தெரியாமல், முக்குமூனமேல் நின்றுனுன்முன்
651. அய்யன் திருநடனம் புரிவதை ஞான அக்கச்சி
ஆறறிவு பெற்றபின் காண்பதடி ஞான தங்கச்சி

நாசிநுனி இடை நின்று, நடனம் புரிகின்றதை கலீர் கலீரென்று
652. நயனத்திடை இடை இருந்துகொண்டு ஞான அக்கச்சி
நடனம் புரிகின்ற நாயகி நாதனுமடி ஞான தங்கச்சி

வேதவாளேந்தி என்முன், எவ்யகம் உய்யவேண்டி வந்தவர்
653. மவுன தேசிகநாதன் என் மெய்குரு ஞான அக்கச்சி
மனுவேத கர்த்தர் நால்வருமடி ஞான தங்கச்சி

வேதவாளெடுத்தோதி, ஜோதி வாசியிலேறி நம்முன்
654. ஆதித் திருமரையை இங்கு ஞான அக்கச்சி
அறிவித்துக் காட்ட வந்தவனடி ஞான தங்கச்சி

உதயகிரியில் நீ ஒலித்தால், அஸ்தகிரியில் நாதம் ஒலிக்கும்
655. ஒன்றுன ஆதி பொருளில் நீ ஞான அக்கச்சி
ஓம் என்ற நாத சொரூபமும் நீ ஞான தங்கச்சி

ஆராச்சி மணிகட்டி அமுதளித்த தர்மத்தை உலகில்
656. அன்னதானம் யாருக்கென்பதை ஞான அக்கச்சி
அறிவித்துக் காட்டுகிறேன் நேரில்வாடி ஞான தங்கச்சி

வானமுதல் வானவன் நீ, பூமியான பின் மனுவானவன் நீ
657. காற்று மழை சர்வ ஜீவனுமாகி ஞான அக்கச்சி
கடைசியில் மனுவானவன் நீ ஞான தங்கச்சி

உயிர்வான ஒரு சொல்லாலே, உலகில் காணும் உண்மை சொல்லே
658. இகத்தில் அமைவது பேரின்ப எல்லே ஞான அக்கச்சி
இல்லையானுல் கூடுகாடு கொல்லே ஞான தங்கச்சி

கோயிலில்லா ஊரில் குடியிருக்க முடியாதென்பதை

659. கூறி நேரில் காட்டுகிறேன் ஞான அக்கச்சி
குடியிருக்கும் மெய் கோவிலைக் காட்டி ஞான தங்கச்சி

அஸ்டமா சித்தாடினாலும், மூவுலகமாண்டாலும்லகில்

660. சித்தனின் மெய் ஞானியவன் ஞான அக்கச்சி
முத்தனின் மனமிருப்பது மோனத்தே ஞான தங்கச்சி

சர்குரு வானவனுன, மெய்குரு இறையவனுனவனே இங்கு

661. சரணகம லாலயத்தனில் ஞான அக்கச்சி
சத்தித்தவன் மெய் ஞானியடி ஞான தங்கச்சி

ஆபத்பாந்தவனென்றும் அனுதரச்சக னென்னுமிறையவனே

662. அலரி துடித்து நாசமாகும் முன்னே ஞான அக்கச்சி
அறிவாய் முன் சற்குரு மெய்குருவை ஞான தங்கச்சி

கோடி கற்பகோடியில் அணுவளவும் இன்பமில்லை துன்பம்

663. இன்பமில்லை தன்பம்தான் கண்டது நீ ஞான அக்கச்சி
இன்ப பேரின்ப மனுபவிப்பவன் மெய் ஞானியடி
ஞான தங்கச்சி

எல்லோரும் நல்லவரே தன் நிலையறிந்து பேசுபவரே உண்மை

664. மனிதன் தான் மேலானவன் என்பதை ஞான அக்கச்சி
மனக்கண் பெற்றபின் அறிவாயடி ஞான தங்கச்சி

இன்பம் இன்பமே இறையவன் அடிகண்டார்க்கு பேரின்பமே

665. தன்பம் தயரம் உனக் கென்றுமே ஞான அக்கச்சி
தாயவனே கண்டபின் அறிவாயடி ஞான தங்கச்சி

மெய் ஞானியின் மெய்ப்பாடலை, அஞ்ஞானி அறியாது
பாடியதுபோல்

666 ஆடிய மயிலை கண்ட வான்கோழி ஞான அக்கச்சி
ஆடியது போலாகும கயவன் பாடல் ஞான தங்கச்சி

முன்னவன் அருள்பெற்று, முறை குருவை கண்டுயாம்

667. விண்ணவர் காணும் முன்னே ஞான அக்கச்சி
விலைமதிப்பிலா தெய்வீகம் கண்டோம் ஞான தங்கச்சி

ஊனக்கண் உலகைக்கான ஞானக்கண் இறையவனைக்காண

668. ஊனக்கண்ணால் உலகை காணுவதும் ஞான அக்கச்சி
ஞானக்கண்ணால் கடவுளைக் காட்டுவேனடி
ஞான தங்கச்சி

காலில்லாதவன் கொண்டி, கையில்லாதவன் முடவன்

669. ஞானக்கண் இல்லாதவன் குருடன் ஞான அக்கச்சி
கடவுள் இல்லையென்பான் கசடன் ஞான தங்கச்சி

ஆரியனைப்போல் படிக்கவேனும், வைசியனைப்போல்
வாழவேனும்

670. சூத்திரனைப்போல் உழைக்கவேனும் ஞான அக்கச்சி
சுகமுனக்கு உலகை ஒட்டி வாழ்ந்தால் ஞான தங்கச்சி

ஆரியனென்றும் பார்ப்பான் அகிலத்தை படிப்பால்
ஏமாற்றினான்

671. படித்தவனுனை ஏமாற்றியதை ஞான அக்கச்சி
பிடித்தால்நீ அவன் ஏமார்ந்திடுவான் ஞான தங்கச்சி

பொருத்தவர் பூமியில் உயர்ந்திடுவார் பொங்கியவர் பூமியில்
தாழ்ந்திடுவார்

672. பொருத்தவர் உயர் மெய் ஞானியாவார் ஞான அக்கச்சி
பொங்கினவர் நாயினும் கேடாவரடி ஞான தங்கச்சி

மனிவானது உண்மையானால், மரணத்தை மறக்க
மாட்டான்

673. அய்யறிவு மரணத்தை மறந்து நடப்பான் ஞான
அக்கச்சி
ஆறறிவு மரணத்தை மறக்கமாட்டான் ஞான தங்கச்சி

நடந்ததெல்லாம் நன்மைக்கே, உன் நடப்பில் உயர்வு தாழ்வு
யாவும்

674. நன்மையாகுமென என்குரு சொல்படி ஞான அக்கச்சி
நன்மையை சகலத்திலும் காண்பாயடி ஞான தங்கச்சி

மன்னன் ஞானி தேவரிஷி முதல், மக்கள் திகம் பெற்றுலும்

675. அத்தனே மக்களும் உதவுவதில்லை உனக்கு
ஞான அக்கச்சி
அறிவுமகனொருவ னுதவுவானடி ஞான தங்கச்சி

எனக்குள் நீயாகவும், உனக்குள் நானுகவும் கடவுள்

676. உயிராகி உண்மை சிவனுகவும் ஞான அக்கச்சி
உடலுயிரில் கலந்ததை காட்டுவேனடி ஞான தங்கச்சி

வாயில் சொன்ன செபதபமும், வாய் செத்தபின் நீதான்

677. வஞ்சனமனுக்கு பதிலென்ன சொல்வாய் ஞான அக்கச்சி
வகைகெட்டு எமனுகி நிரையவாயடி ஞான தங்கச்சி

வில்லம்பு பட்டபுண் தான், வேதனைதரா துன்னுடலில்

678. சொல்லம்பு கண்ணம்பு கொடியதாகும் ஞான அக்கச்சி
ஜெகத்தில் என்றும் மாறுதடி ஞான தங்கச்சி

வட்டிக்கு பணம் கொடுத்து, அதிக பணம் வாங்குவது

679. பாபமான செயலாகுமென்று ஞான அக்கச்சி
பாரில் நான்குவேதகர்த்தர் சொன்னாரடி ஞானதங்கச்சி

வட்டி வாங்குபவர் காலடிக் கீழுள்ள மண்ணெடுத்து

680. எறும்புக் குழியில்போட எறும்புமுதல் ஞான அக்கச்சி
எதுவுமண்கு உயிர்வாழாதடி ஞான தங்கச்சி

கைப்பொருள் முப்பொருள், பொய்ப்பொருள் யாவுமாகும்

681. அகிலத்தில் முதற்பொரு ளதுவானதை ஞான அக்கச்சி
அறிவாய் மெய்ப்பொருள் கண்டபின்னே ஞானதங்கச்சி

ஒளியில் குரிய சந்திர, நவரத்தினங்களிலும் உயர் ஜோதியை

682. ஒளியான ஜோதி உன் உடம்பிலே ஞான அக்கச்சி
ஒளிவை அறிவித்து காட்டுவேனடி ஞான தங்கச்சி

தன்னையறிந்தபின் உலகிலது, தரிப்பாட்டி லாக்குமது

683. சொன்ன வழிகளெல்லாம் ஞான அக்கச்சி
ஜோதிபோல் காண்பாயடி ஞான தங்கச்சி

மெத்த பணம் தேடி ஓடி, மாய்ந்திடும் முன்னம் நீயுலகில்

684. மேலக் குருநாதன் வாய்த்துவிட்டால் ஞான அக்கச்சி
மேதினியில் பேயாக மாட்டாயடி ஞான தங்கச்சி

பொய்யுலகம் எனக்குவேண்டாம், பொய் முப்பொருளும் வேண்டாம்

685. மெய்ஞானப் பொருளெனக்கு வேண்டுமடி ஞான அக்கச்சி
மேலே தலைநிமிர்ந்திவி நடப்பதில்லையடி ஞான தங்கச்சி

செருப்பாலடிப்பவங்கு விருப்பாலே கோடாகோடி செம்பொன்

686. சேவித்திருந்தவன் மெய் ஞானியடி ஞான அக்கச்சி
சேவித்தியாதவன் அஞ்ஞானியடி ஞான தங்கச்சி

கடவுள் இல்லையென்பான், கடவுளாலாவதென்ன என்பான்

687. கலிக் கடைசியில் பிறந்தவனுக்கு ஞான அக்கச்சி
கர்த்தன் சக்தியாவும் தந்திருப்பானடி ஞான தங்கச்சி

மலைபோன்ற வாகனங்கள் மனிதன் பயப்படும் கோர சப்தத்துடன்

688. மலைமேடுகளேறும் ராட்சச வாகனமும் ஞான அக்கச்சி
மனிதன் செய்யும் எந்திரமடி ஞான தங்கச்சி

உன்னைச்சொல்லிக் குற்றம் இல்லையடி, என்னைச் சொல்லிக் குற்றம் இல்லையடி

689. கலிகாலத்தின் கோலமடி ஞான அக்கச்சி
காலிகள் செய்யும் அஸ்டகசமடி ஞான தங்கச்சி

ஊருக்குத் தெரியாதுன் அருமை, யாருக்கும் புரியாது உன் பெருமை

690. உன்னைக் கண்டவர்கள் அறிவாரடி ஞான அக்கச்சி
உண்மை கண்டதை சொன்னேனடி ஞான தங்கச்சி

அப்பா மகனே உனையடுத்து. கலிமுதிர்வேளியகால
உலகமன்

691. சலிப்புற்று உனை அடுத்திடா சீடனை ஞான அக்கச்சி
சலிப்புற்று நீ யாரையும் விடாதே மகனே
ஞான தங்கச்சி

சர்வாகம சங்கீர்த்தனம். கோவிந்த கோகுல பாலனை

692. ஸ்சாமளரூப ஞானக் கண்ணனை ஞான அக்கச்சி
சந்தித்ததால் சொன்னேனடி ஞான தங்கச்சி

அணுவினுக் கணுவாகி, அகிலத்தில் சிறிய துரும்பாகி

693. அருவுருவாகி உயிராகி வளர்ந்த ஞான அக்கச்சி
ஆதியை கோில் காட்டுவேனடி ஞான தங்கச்சி

இருளிலிருந்து ஒளிவான ஜோதி. நாதவிந்து ஆதிஜோதி

694. ஆதிமனு ஈசனுனதும் ஞான அக்கச்சி
அறிவாய் நீ கடவுளானதை ஞான தங்கச்சி

சரவனப் பொய்கையில். பிறந்தவன் மெய் ஞானியாவான்

695. சந்ததமும் இளமையோடிருப்பான் ஞான அக்கச்சி
சற்குரு நாதனும் அவனுமடி ஞான தங்கச்சி

அஞ்ஞானமென்பது இருள். மெய் ஞானம் என்பது ஒளிவு

696. இருள் உன்னுள் அறியாமையாகும் ஞான அக்கச்சி
இருக்கும் ஒளி உன்னுள் காட்டுவேனடி ஞான தங்கச்சி

முப்பாலுக்கப்பால் சென்று, பெரும் பாள் இருள் கடந்து

697. எல்லாமாக ஒன்றிருப்பதை ஞான அக்கச்சி
என்னெதிர் உன்னில் அறிவாயடி ஞான தங்கச்சி

கல்லினுக்குள் தேரைக்கும், கருப்பை உயிர்க்கெல்லாம்

698. காணுது உணவளித்து காப்பவனை ஞான அக்கச்சி
கண்டுவிட்டால் உனக்கு மோட்சமடி ஞான தங்கச்சி

அம்பலத்தில் ஆடும் கண்ணு. சித்தியானந்த நீல வண்ணு
கண்ணு

699. ஆதித் திருப்பாற்கடலில் சயனகண்ணு ஞான அக்கச்சி
அகிலம் நிறைந்த மெய் ஞானக் கண்ணு ஞான தங்கச்சி

கோடிக் கொருவனன்றே தெய்வந்தை. கண்டு
தொழுவன்தான்

700. கோடா கோடி மக்கள் யாவரும் ஞான அக்கச்சி
கேலிசெய்து வணங்குமடி ஞான தங்கச்சி

சரிநிகர் ஆவாரோடி என், சாமிக்கு நிகர் இல்லையடி இங்கே

701. சகலத்திலும் உயர்ந்தோனடி ஞான அக்கச்சி
சற்குரு நாதனும் அவனுமடி ஞான தங்கச்சி

உண்டு உண்டுரைத்தல்லாது, வேறு எதுவும்
காணப்போவதில்லை

702. உண்மை இறையவனை கண்டுவிட்டால் ஞான அக்கச்சி
உண்ணவும் உறங்கவும் மாட்டாயடி ஞான தங்கச்சி

பொய் இல்லை மெய்யாய் எனது தாலி, கண்டவன்
தாலுலகில்

703. போகுவான் கைலாசமே ஞான அக்கச்சி
புண்ணியம் செய்தோனுமாவானடி ஞான தங்கச்சி

என்னிலிருந்து நீ ஆடுவதும். உன்னிலிருந்து நானுடுவதும்

704. எல்லா ஜீவனிலும் ஆடுவதை ஞான அக்கச்சி
ஏகமாய் ஆடுபவனை காட்டுவேனடி ஞான தங்கச்சி

அறிவுகெட்ட ஏருமைமாடு, பிறவி ஊமை செவிடானவர்கள்

705. இந்தவித அங்கஹீனமானவர்கள் ஞான அக்கச்சி
இறையவன் சாபத்திற் காளானவரடி ஞான தங்கச்சி

காலன் உனை அணுகி கருக்கருவா கொண்டுன்முன்னின்று

706. கழுத்தை அறுப்பதை மறந்துவிடாதே ஞான அக்கச்சி
கதிகலங்கி கடைசியில் கதறுவாயடி ஞான தங்கச்சி

பொய்யான பொய் உலகில், பொய் பேசாதவர் யாருமில்லே

707. பொய் அழியும் மெய் அழியாதது ஞான அக்கச்சி
பொய்யாகும் உன் உடலுமடி ஞான தங்கச்சி

அழியும் உடல் மனிதவுடலாகும், அழியாத உடல் கடத்தி
னுள்ளாகும்

708. மனிதன் நாற்ற புலாலுடம்பாகுமடி ஞான அக்கச்சி
மனுவுக்குள் கடவுள் அரூபியாகுமடி ஞான தங்கச்சி

உடல்காட்டி நான் கடவுளென்பான், உடலோடுள்ளவன்
மனிதன்தான்

709. உடலுக்குள் இருக்கும் அரூபியானவனே ஞான அக்கச்சி
உண்மையை உன்முன் காட்டுவேனடி ஞான தங்கச்சி

இருவித மரணமுண்டும், புண்ணியன் பாவி என்றறிய

710. விந்து வெளியாகாது புண்ணியனுக்கே ஞான அக்கச்சி
விந்து வெளியானால் பாவியடி ஞான தங்கச்சி

சைவமாவது உண்மையானால், ஜலம் வருவதில்லே கண்டாய்

711. சைவம் உலகில் நீ ஆகாவிடில் ஞான அக்கச்சி
ஜலம் வந்து நாரி சாவதுண்மையடி ஞான தங்கச்சி

பார்க்க வெகு தூரமில்லே, பார்த்தால் தெரியுதிபார் ஞானம்

712. பார்க்கவேண்டு மானவர்களுக்கெல்லாம்
ஞான அக்கச்சி
பாரில்வைத்து நேரில் காட்டுவேனடி ஞான தங்கச்சி

மனப்பூட்டை திறப்பது மெய்யாலே, இரும்பு பூட்டை
திறப்பது கையாலே

713. மங்கா புகழ்பெருவதோரு சொல்லாலே ஞான அக்கச்சி
மனு ஈசனை குருவனடைந்தார்க்கடி ஞான தங்கச்சி

உளமை எழுத்தின் உடலானதும், ஓங்கார எழுத்துன்
உயிரானதும்

714. பேசும் எழுத்தும் பேசாதெழுத்தும் ஞான அக்கச்சி
பேசும் குருவானால் காட்டுவாரடி ஞான தங்கச்சி

உபநிடத தீர்ச்சையிலே உண்மை தெய்வம் ஒன்று என்பதை

715. உயர்குரு காட்டி சொன்னாரடி ஞான அக்கச்சி
உண்மையை நான் கண்டேனடி ஞான தங்கச்சி

அஞ்செழுத்தில் உண்மையான, அதுவான அப்பொருளே

716. நெஞ்செழுத்தில் ஒன்றுகி நான் ஞான அக்கச்சி
நிலைநிற்கும் நாளதுவோ ஞான தங்கச்சி

சிந்தித்ததெல்லாம் உலகில், சிவபூரணமாகக் கண்டுலகில்

717. வந்தித்து வாழ்த்திக்கொண்டு ஞான அக்கச்சி
வணங்குவேன் உன்னைக்கண்டு ஞான தங்கச்சி

பொய்உலக பொய் உறவும், பொய் உடலும் பொய் எனவே

718. மெய் நினவு மெய்யாவதானால் ஞான அக்கச்சி
மெய்யுடனே காண்பாயடி ஞான தங்கச்சி

பொய்யுலகவானிலுள்ள, சந்திரசூரிய நட்சத்திரமுதல்யாவும்

719 பொய் இல்லே உன் உடலிலுள்ளது ஞான அக்கச்சி
மெய்ப்பொருளில் யாவும் நீ காணலாமடி ஞான தங்கச்சி

ஜாட்டையில்லா பம்பரம்போல், ஆடும் ஜடலமிதுவுலகில்

720. ஆட்டமென்ன ஆடினாலும் ஞான அக்கச்சி
அழிந்தேபோவ துண்மையடி ஞான தங்கச்சி

எல்லோருக்கும் இடம் கொடுத்து ஏமாந்த, தமிழன் தமிழ்
நாடும்

721. தன்னுயிர்போல் மன்னுயிர் காக்கும் ஞான அக்கச்சி
தயவுள்ளவன் உலகில் யாருமில்லேயடி ஞான தங்கச்சி

தன்னுயிர்போல் மன்னுயிரை, கார்த்த குருவானவனே

722. உலகில் உள்ள உயிர்களெல்லாம் ஞான அக்கச்சி
உண்மையாய் தொழுது பணியுமடி ஞான தங்கச்சி

பணியாற்றிசற்குருவை ஞானக்கண்ணால்கண்டு மெய்குருவை

723. மணியொத்த ஜோதி இன்பம் ஞான அக்கச்சி
மங்காத பிரகாசமடி ஞான தங்கச்சி

இவ்வுலக இருள் கடந்து, அப்பால் ஒளியில் மெய்கலந்து
724. மூப்பாள் கடந்த பின்னே ஞான அக்கச்சி
முத்தி அடைவது சத்தியமடி ஞான தங்கச்சி

கண்டவடிவெல்லாம் நின், காட்சியென்றே கைகுவித்து
725. பண்டு இன்றும் நின்ற என்னே ஞான அக்கச்சி
பார்த்திரக்க வேண்டாமோடி ஞான தங்கச்சி

சித்தருக்கும் ஜாதியில்லை, மெய்ஞானியர்க்கும் ஜாதியில்லை
726. சிறந்தோர்க்கும் ஜாதியில்லை ஞான அக்கச்சி
சகல மனிதரும் இரு ஜாதியடி ஞான தங்கச்சி

சர்வமூல மந்திரமும், சகலவேதம் ஒன்றென்பதும்
727. ஜகத்குருநாதன் தானும் ஞான அக்கச்சி
சபையில் வைத்து நிரூபிப்பவனும் ஞான தங்கச்சி

தற்பெருமை இல்லாதோனும், தனித்திருந்து வாழ்பவனும்
728. சொற்பெருமை பேசாதோனும் ஞான அக்கச்சி
சொந்த ஊரில் வாழ்பவனும் ஞான தங்கச்சி

தனித்திருந்து வாழ்ந்தார்க்கும், தவம்செய்து
உயர்ந்தோர்க்கும்
729. வானவர் நாடு வழி திறந்த ஞான அக்கச்சி
வாழ்ந்திடுவார் சொந்த ஊரில் ஞான தங்கச்சி

மலடிவயிற்று மகன்போலொரு, புதையலெடுத்த தனம்
போலே
730. தளிர் வயிரமடித்த களம்போலே ஞான அக்கச்சி
தனிகை சைகு குருவானாரடி ஞான தங்கச்சி

ஆயிரம் ஆயிரம் தடவை, ஆண்டவன் பெயரை ஏட்டில்
731. அநேக இடத்தில் சொன்னதை ஞான அக்கச்சி
அறிவித்து காட்டுகிறேன் கேளில்வர்டி ஞான தங்கச்சி

காட்டுகிறேன் காட்டுகிறேன், கடவுளைக் காட்டுகிறேன்
732. காட்டுகிறேன் உன் எதிரினிலே ஞான அக்கச்சி
கடவுளை காட்டுகிறேன் கேரில்வாடி ஞான தங்கச்சி

பார்த்துவிட்டதினால் பலனில்லை, பார்த்து பழக்கம் செய்ய
வேண்டும்
733. நாடினால் நாடுவானவனுன்னை ஞான அக்கச்சி
தேடினால் முன் நிற்பான் சத்தியமாகி ஞான தங்கச்சி

குருபரன் உபதேசத்தை குலைத்து வாய்திறவாமல்
734. கடலில் சிப்பி மழைத்துளி மூடி முத்தானதுபோல்
ஞான அக்கச்சி
கார்த்தால் மெய் ஞானம் கிலைக்குமடி ஞான தங்கச்சி

பரமனைப் பார்த்தும் படித்தவர்கள், பலன் பெற்ற மெய்
ஞானியர்கள்
735. பரமனை பாரில் கண்டுசொன்னதை ஞான அக்கச்சி
பரமனை பார்த்தபின் உண்மை அறிவாயடி
ஞான தங்கச்சி

ஏட்டில் எழுதிவைத்தேன், எழுதியதை காட்டி சொல்லி
வைத்தேன்
736. என்னவென்று கேட்பாரில்லை ஞான அக்கச்சி
என்வேலை முடித்துப் போவேனடி ஞான தங்கச்சி

அருள்வாக் களிப்பான பின்னே, அகக்கண் திறந்து
பார்த்து சிவனை
737. ஆண்டவன் அருள்பாலிப்பை ஞான அக்கச்சி
அடைந்தபின் ஆனந்தமாயடி ஞான தங்கச்சி

ஏதேது என்பார் இந்த காலத்திலும், இப்படியும் உலகில்
மெய்ஞானி
738. என்னிடம் வந்தாயானால் ஞான அக்கச்சி
எளிதில் உண்மை காண்பாயடி ஞான தங்கச்சி

புத்திமானுனக்கால் இத்தனை உனக்குப் போதும் உலகில்
739. புத்திகெட்ட மிருகமானால் ஞான அக்கச்சி
எத்தனை சொன்னாலும் வராதடி ஞான தங்கச்சி

மெய்ஞான அக்கச்சிக்கும், மெய்ஞான தங்கச்சிக்கும்

740. மேலான தெய்வம் இல்லே ஞான அக்கச்சி
மேலான பாடலுமில்லே ஞான தங்கச்சி

தித்தித்திடும் தேனுமிர்தத்தை. திகட்டாத
தேவ அமிர்தத்தை

741. தினம் தினம் அருந்தச் செய்த ஞான அக்கச்சி
திருநேத்திர ஞான சற்குருநாதனே ஞான தங்கச்சி

திருப்பார்க் கடலில் தேவர் அசுரர் கடைந்தெடுத்த அமுதை

742. திருநேத்திர சற்குருநாதனையடைந்தால் ஞான அக்கச்சி
தினமருந்தி பேரின்பமடைவாய் ஞான தங்கச்சி

திருநேத்திரநாத சைகானவன், அழியாத் தமிழ் நேர்த்தி

743. திருத்தி படித்தாயானால் ஞான அக்கச்சி
திகள்கொண்ட கீர்த்தியடி ஞான தங்கச்சி

[வல்லாதி வல்லவன்]

எல்லாம் முளுப்புரட்டு, வல்லான் வகுத்த வழியுலகில்

744. சொல்லாதே சும்மர் நீ நில்லாதே ஞான அக்கச்சி
சுய காரியம்பார் இது பொய்யூரடி ஞான தங்கச்சி

சைகு திரு நேத்திரநாதன் அவர்கள் பாடல் முற்றிற்று.

— வெளியிடுவோர் உரிமை பதிப்பு —

விருத்தம்.

வாழ்க மேல் வாழ்க வாழும் அருள்வாழி வாழ்க வாழ்கவே
வாழ்க மேல் வாழ்க வாழும் அருள்நேயம் வாழ்க வாழ்கவே
வாழ்க மேல் வாழ்க வாழும் சிவஞானம் வாழ்க வாழ்கவே
வாழ்க மேல் வாழ்க வாழும் மெய் குருகுலம் வாழ்க
வாழ்கவே